திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவவர்களே, கடற்கரைப் பகுதிகளில் மீனவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் குறிப்பாக திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரம் வரையில் உள்ள பகுதிகளில் உள்ள மின் விளக்குகள் எப்போதுமே எரியாமல் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். நான் சென்ற வாரம் கூட அங்கு சென்று சுற்றுப்பயணம் செய்யும்போது அங்குள்ள நிலைமையைப் பார்த்தேன். கடற்காற்றினால் புதிதாகக் கம்பி பொருத்தினால்கூட அது அறுந்து விடுகின்றது. ஒரு மாத காலம் கூட அந்தக் கம்பி இருப்பதில்லை. ஆகவே இந்த நிலைமையைப் போக்குவதற்காக அன்டர் கிரவுன்ட் என்ற முறையில் அதாவது பூமிக்கு அடியிலே கம்பிகளை அமைத்தால் பாதுகாப்பாக இருக்கும். விளக்குகள் எரிவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே அவ்வாறு பூமிக்கடியிலே பதிப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, கடலோரப் பகுதிகளில் உப்புக் காற்றின் ஈரப்பசை இத்தகைய நிலைமையை உருவாக்குகிறது. எனவே வெறும் அலுமினிய கம்பிகளை பொருத்துவதற்குப் பதிலாக இரும்புக் கம்பியோடு சேர்ந்த அலுமினியக் கம்பிகளை பொருத்தவேண்டும் என்ற வகையில் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும் பூமிக்கடியில் கம்பிகளை அமைப்பது என்றால் ஏராளமாக செலவாகும். அதனை மின் வாரியத்தால் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே இரும்புக் கம்பிகளோடு சேர்ந்த அலுமினிய கம்பிகள் நிச்சயமாக இந்த குறையைப் போக்கும் என்று நம்புகிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவரவர்களே, உப்புக் காற்று படியாத கம்பிகள் பொருத்தப்பட்டிருக்கின்ற நம்முடைய சென்னை மாநகரிலே சைதாப்பேட்டையிலே விளக்குகள் பெரும்பாலும் எரிவது இல்லை என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அங்கே இரும்பு கலந்த அலுமினியக் கம்பிகளைப் போடுவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எனக்குத் தெரியாது.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் வேலை வாய்ப்புகள்.

*வினா எண் 62—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தூத்துக்குடி அனல் மின்சாரப் பிரிவில் புதியதாக பணிக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்களா? எத்தனை பேர்கள்?

1981 ஜனவரி 28]

ஆ) ஏற்கனவே பல ஆண்டுகள் காண்டிராக்ட் தொழிலாளர்களாக பணியாற்றி தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஐ. டி. ஐ., சான்றிதழும், எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதியும் பெற்று, வேலைத்தேடித்தரும் நிறுவனங்களால் அனுப்பப்பட்டவர்கள் தேர்வுக்காக பரிசீலிக்கப்பட்டுள்ளார்கள், இன்னும் நியமிக்கப் படவில்லை.

(ஆ) காண்டிராக்ட் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் டர்பைன் போன்ற மிகப் பெரிய பிரம்மாண்டமான உறுப்புகள் எல்லாம் நிர்மாணிக்கப் பட்டு அதற்கென் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வேலை செய்துவந்திருக்கின்றனர். புதிதாக உருவாக்கக் கூடியபணியிலும் இதே தொடர்பான வேலைகளுக்கு அவர்கள் முன் அனுபவம் பெற்றிருக்கிறார்கள்—அந்த பணியினையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு அவர்களைப் பணியில் அமர்த்த அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா? இது சம்பந்மாக தொழிற்சங்கத் தலைவர் கூட மனு கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள் அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதையும் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல ஒரு பிரம்மாண்டமான நிறுவனம் தான் அது. ஆனால் நிர்வாகப் பணியிலே ஈடுபட்டவர்களுக்கும், பராமரிப்புப் பணியிலே ஈடுபட்டவர்களுக்கும் வேறுபாடு உண்டு. வேலைக்கு வருகிற போது குறைந்தபட்ச கல்வித் தகுதியும், தொழில் நுட்ப அறிவும் இருக்குமேயானால், அவர்கள் மேலும் தங்கள் பணிக்காலத்தில் படிப்படியாக உயர்வதற்கான வழி முறைகள் இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்களிடத்திலே பணிபுரிவோர் அதே, கல்வித் தகுதி, தொழில் நுட்பத் தகுதி இருக்குமேயானால், அவர்களும் மற்றவர்களைப் போல தேர்வுக்கு வரலாம்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஏற்கெனவேயே அந்தப் பணியிலே இருந்தவர்கள். அதே பணிதான் புதிதாக மறுபடியும் நிர்மாணிக்கப்பெறுகிறது. அதனால், ஏற்கெனவே இருந்தவர்களுக்கு அந்தப் பணியில் தேர்ச்சிப் பெற்றவர்கள் என்ற முறையில் முன் உரிமை தர ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

[1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. ஐ.டி.ஐ. இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் படிப்பே இல்லாமல் முன் அனுபவம் இருக்கிறவர்களுக்கு முன் உரிமை தரப்படவேண்டும் என்று சொல்வது நியாயமாகாது. இயற்கையின் நியதிக்கே முரணானது. முன் அனுபவம் என்பது ஏதோ ஒன்றைப்பற்றி மட்டும் தெரிந்திருக்கக்கூடும். ஆனால் தொழில் நுட்பக்கல்வி கற்றவர்கள் அப்படியில்லை. குறிப்பிட்ட துறை சம்பந்தமான எல்லா அனுபவமும் அவர்களுக்கு இருக்கக் கூடும். வெறும் வேலை அனுபவம் பெற்றவர்கள் கன்ஸ்டிரக்ஷனில் வேண்டுமானால் அனுபவம் பெற்றிருக்கலாம், அதன் இயக்கத் திறமையில் இருக்காது. ஆகையினால்தான் சொல்கிறேன், குறைந்த பட்சக்கல்வித் தகுதி, தொழில் நுட்பக் கல்வித் தகுதியினை ஒப்பந்தக்காரர்களிடத்திலே வேலை செய்திருந்தவர்கள் பெற்றிருந்தால் அவர்களும் தேர்வுக்கு வரலாம் என்று.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எவ்வளவு யூனிட்டுகள் வேலை செய்கின்றன? அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு? இனி செயல்படவிருக்கும் யூனிட்டுகளின் உற்பத்தித் திறன் எவ்வளவு? அதனால் எத்தனை பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பிருக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த அனல் மின்நிலையத்தில் 3 யூனிட்டுகள் இருக்கின்றன. ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. இரண்டாவது இந்த மாதம் இயங்க ஆரம்பித்திருக்கிறது. எவ்வளவு பேர்கள் அதிலே பணிபுரிகிறார்கள், எவ்வளவு பேருக்கு மேலும் வேலை வாய்ப்பிருக்கும் என்பது போன்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

நாங்குனேரி வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு.

*வினா எண். 63—திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி வட்டத்தில் வங்கியில் லோன் வாங்கி 3000 மோட்டார்கள் பொருத்தப்பட்டு மின் இணைப்புக் கிடைக்காதது குறித்து அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சப்ளை எப்போது கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கிடமில்லை.